

சென்னையில் நடைபெற்று வரும் புகழ்பெற்ற நாட்டிய கலா மாநாட்டில், பிரபல பரதநாட்டியக் கலைஞர் பாலதேவி சந்திரசேகருக்கு நாட்டிய கலா விசாரதா ஹா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. பரதநாட்டியத்தில் தத்துவார்த்த ரீதியான தேடல் மற்றும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. விருதினை பத்மஸ்ரீ சித்ரா விஸ்வேஸ்வரன் மற்றும் பத்மஸ்ரீ டாக்டர் சந்திரபிரகாஷ் திவேதி உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் வழங்கினர்.